# திறவுகோல்

2056

புரட்டாசி

மாத இதழ்



வெளியீடு:

மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.

நோக்கம்:
மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...
பகிரி: +91 8220567322

இணையம்:
https://maintharkal.mannai.in/

# நாம் சந்தித்துக் கொண்ட

முதல் சந்திப்பில்
நீ நீயாகவும்
நான் நானாகவும் இருந்தோம்.
நமது அடுத்த சந்திப்பில் தான்
சில மாற்றங்கள் நிகழ்ந்தது.
பிரிதொரு சந்திப்பில்
பெரியதொரு மாற்றங்கள்
நிகழ்ந்தது நமக்குள்.
இறப்பிற்கு முன் நிகழும்
சந்திப்பே நமது இறுதி
சந்திப்பாகும்.
அது எப்போதும் நிகழுமென்று
நம்மில் யாராலும்
அறுதியிட்டு சொல்ல முடியாது.
அன்றைய சந்திப்பில்
நம்மிடையே மாற்றங்கள்
ஏதுமின்றி
விழிகள் கசியும் ஈர துளிகளில்
இதயம் மலர்ந்தும்
அன்புவொன்றே பூத்திருக்க
நம் நட்பின் நறுமணம்
அங்கெங்கும் வியாபித்திருக்கும்.

# முதலில் கர்வம்

ஒழி.
களங்கமற்ற இதயம்
கொள்.
வேண்டாம் யாரிடத்திலும்
பகை.
தீயவைகளை அடியோடு
விரட்டு.
வீம்பு எதற்கு
விட்டுக் கொடு.
மனதில் நல்லதை
விதை.
சுற்றமும் நட்பும் கூடி
வாழ்.
இருக்கும் வரை
பேரன்பை அறுவடை
செய்.

## கோப்பையில்

இதழ்கள் பதித்து
இளஞ்சூட்டில் தேநீரை
இதமாய்ப் பருகும்
அதிகாலை வேளையில்...
வண்ணங்களை
அள்ளிப் பூசிக் கொண்ட
வண்ணத்துப்பூச்சியாய்
பரபரப்புடன்
என்னைச் சுற்றி சுற்றி
வலம் வருகிறாய்.

—

பாரியன்பன் நாகராஜன்
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353.



# சிறகுக்கு வானமும் சிறிதே!

பெண்
பிறந்திருக்கிறாள் என்றதும்
சலித்துக் கொள்ளும் உலகில் தான்
சத்தம் இல்லாமல் சாதனைகளை
படைக்கிறாள்
அவள்!

பூட்டப்பட்ட விலங்குகளை உடைக்க
கையில் எடுக்கிறாள்
கல்வி என்னும் ஆயுதத்தை
ஏழ்பிறவிக்கும்
அரணாக்குகிறாள்!

அறத்தை முழுமையாய் மூட்டைக் கட்டி
அவளை நோக்கி வீசப்படும்
அமிலச் சொற்களை விழுங்கியே
வளர்கிறாள்!

ஆண் பெண் இரண்டிற்கும்
ஓர் எழுத்தே பேதம்
இதில் கீழ் என்ன? மேல் என்ன?
அழுத்தப்படும் ஆதிக்கத்தை
கடந்தே வளர துடிக்கிறாள்!

ஒவ்வொரு நாளும் கண்களில்
தேக்கிய இலக்கை
ஒளிபரப்பும் வானவில்லாய்
வண்ணம் தீட்ட
நகலெடுத்த கனவுகளோடு பறக்கிறாள்!

ஆம்
உன் பயணம் வெகு தொலைவு தான்
உன் இலக்கும் எட்டும் தொலைவில்
தான்
ஒருபோதும் கிளையை நம்பி
இளைப்பாறிவிடாதே
அது எப்பொழுதும் வெட்டப்படலாம்

உன் சிறகுகளை விரி
அளந்து விடு வானை
அப்பொழுது உணர்வாய் நீ
சிறகுக்கு வானமும் சிறிதே என

—

பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.
கைப்பேசி: 63807 04001



# பூக்களின் இதழ்களை தாங்கி நிற்கும் காம்பு அழகு என்றால்

அதன் விதைகளையும் சுமந்து நிற்கும்
அதே காம்பு பேரழகு

அழகும் பேரழகும்
ஒரே இயற்கையின்
இரு அத்தியாயங்கள் ..

- ச. இராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்.

# நூல் அறிமுகம் – அப்பாவின் ஊன்றுகோல்

கவிதைத் தொகுப்பு
ஆசிரியர்: நா மயிலவன்
முதல் பதிப்பு ஆகஸ்ட் 2025
பக்கம்: 80
விலை: ரூபாய் 100/-

வெளியீடு:
ஸ்ரீ சக்தி வெளியீடு மகாலிங்கபுரம்
பொள்ளாச்சி

தொடர்புக்கு: 9865261110

ஒரு நத்தையின் நடை பயணம் நாயுருவி
மௌனத்தின் மொழி
மகரந்தச் சேர்க்கை
பழுத்த இலையின் புன்னகை

ஆகிய ஐந்து கவிதைத் தொகுப்புகளை வெளியிட்ட மயிலவன் அவர்கள் தலைமை ஆசிரியர் பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்.

"அப்பாவின் ஊன்றுகோல் எனது பூஜை அறைப் பொக்கிஷங்களில் ஒன்று. நான் பெற்ற பட்டங்களுக்கு சாட்சி. நம்பிக்கை நட்சத்திரம். உழைப்பின் ஊற்று. முன்னேற்றத்தின் முன்னோடி. அப்பாவின் மூன்றாவது கால். நடந்து செல்லும் பாதையில் உள்ள மேடு பள்ளங்களைக் காட்டி தட்டுத் தடுமாறி கீழே விழாமல் தாங்கும் துணைவன். அது அவருக்கு ஒரு வழிகாட்டி" என்று தனது முன்னுரையில் ஆசிரியர் குறிப்பிட்டிருப்பதைப் போலவே தன்னை வளர்த்து ஆளாக்கி இந்த உலகிற்கு நல்லதொரு குடிமகனாக உலக விட்ட தந்தைக்கு இந்த நூலை சமர்ப்பணம் செய்திருக்கிறார் ஆசிரியர்.




எளிமையான மொழியிலும் வலிமையான கருத்துக்களை புகுத்தி நகைச்சுவையுடனும் தொடர்ந்து மனதில் ஊறும் அன்பிலும் காதலிலும் தன்னை நிலைத்துக் கொண்டு காற்றாய் நீராய் அவசியமானதொரு எழுத்துச் சித்திரத்தை அப்பாவின் ஊன்றுகோலில் எழுதி இருக்கிறார் ஆசிரியர்.

உழைப்பு ஒன்றே மனிதனை மேன்மைப்படுத்தும் மிகச்சிறந்த ஆயுதம் என்பதையும் கல்வியின் வழியே தனது எல்லா கனவுகளையும் நிறைவேற்றிக் கொள்ள மனிதனுக்கு நிறைய வாய்ப்புகள் கிடைக்கும் என்பதையும் தொடர்ந்து உழைத்துக் கொண்டே இருப்பவர்களே உற்சாகமாக இருப்பார்கள் என்பதையும் நூலின் கவிதைகள் கோடிட்டுக் காட்டுகின்றன.

ஒவ்வொரு பிள்ளைகளும் தங்களது பெற்றோர்களின் பொறுப்பையும் கவனத்தையும் தங்களை வளர்த்து ஆளாக்குவதற்கு அவர்கள் பட்ட

இன்னல்களையும் உணர்ந்து கொள்வதற்கு அவர்கள் பெற்றோர்களாக மாறும்போதே அந்த வலியும் வேதனையும் தெரியும் என்பார்கள்.. தொடர்ந்து எதிர்வரும் தலைமுறையினருக்கு அறிவுரையாகவும் எழுத்தாகவும் எழுதி வைத்தாலும் தான் படும் அனுபவங்களால் மட்டுமே ஒவ்வொரு மனிதனும் பிறரின் வேதனையை அறிய முடிகிறது. அந்த வகையில் இந்த நூலிலும் தனது பெற்றோர் பெற்ற துன்பங்களையும் பிள்ளைகளை வளர்ப்பதற்கு அவர்கள் கொடுத்த உழைப்பினையும் மிகச் சிறப்பான வரிகளில் எடுத்து இயம்புகிறார் மயிலவன் அவர்கள்.

பணி ஒய்வு பெற்று இருபது ஆண்டுகளாகியும் தனது மனைவியின் மீது காட்டும் பேரன்பும் பெருங்காதலும் நூலில் நல்லதொரு காதல் கவிதைகளை அவரை எழுத வைத்திருக்கிறது. ஆம் காதலுக்கு வயதில்லை தானே. காற்றும் காதலும் எப்போதும் நமக்குள் ஓடிக் கொண்டே இருந்தால் மட்டுமே வாழ்வில் நிலைத்திருக்க முடியும் என்பதை கவிஞர் இந்த நூலில் எழுதி இருக்கும் காதல் கவிதைகள் நிரூபித்து இருக்கின்றன.

நூலின் நிறைய கவிதைகள் தனது தந்தையின் நினைவுகளைப் போற்றும் வண்ணமும் தன்னை ஆளாக்குவதற்கு அவர் எவ்வளவு தூரம் உழைத்தார் என்பதையும் அதை கவிஞர் எப்படி புரிந்து கொண்டார் என்பதையும் அழகாக எடுத்துரைக்கின்றன. வெயிலின் அருமை நிழலில் தான் தெரியும் என்பார்கள். அதே போல் பெற்றோர்களினுடைய உழைப்பும் வழிகாட்டுதலும் அவர்கள் உயிருடன் இருக்கும் போது நாம் உணர்ந்து கொள்வதை விட அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்த பிறகு அதை எண்ணி எண்ணி உணர்ந்து வேதனைப்படுவதே அதிகம். அத்தகு அனுபவங்களை நூலின் நிறைய கவிதைகள் நமக்குள் கண்ணீரையும் வரவழைத்து அவரவர் பெற்றோர் மீதான பாசத்தையும் நேசத்தையும் உணர்த்தி விடுகின்றன.

அன்பு, பாசம், காதல், நட்பு, உழைப்பு, விவசாயம், நாட்டுப்பற்று, தேசத்தின் மீதான தொடர்ச்சியான அக்கறை, இயற்கையின் மீதான நேசம், சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கான ஆசை, நடைபயண நண்பர்கள் மீதான நட்பு, கால்நடைகள் வளர்ப்பதன் அவசியம், சமையலறைக் கருவிகள் இன்று சமையலில் ஏற்படுத்தும் தாக்கத்தின் மீதான எதிர்பார்ப்பு, தீண்டாமையின் மீதான கடுங்கோபம், தேர்தல் அரசியலின் மீதான ரௌத்திரம் என நூலின் கவிதைகள் பல்வேறு தளங்களை தொட்டுச் செல்கின்றன.

பெரும்பாலும் கவிஞர்களுக்கு கடவுள் மீது  நம்பிக்கை குறைவாகவே காணப்படும். ஏனென்றால் அவர்கள் உழைப்பையும் உழைக்கும் மக்களையும் கடவுளாக வணங்குபவர்கள். நிகழ்காலத்தின் மனிதர்களை அவர்கள் நேசிப்பவர்கள். கண்ணுக்குத் தெரியாத கடவுள் மீது காட்டும் கருணையை விட

கண்ணெதிரே இருக்கும் மனிதர்கள் மீது
காட்டும் பேரன்பே உலகத்தின்
சுழற்சியை சமமாக இயக்கவல்லது
என்பதை கவிஞர்கள் அவ்வப்போது
உணர்த்திக் கொண்டே இருப்பார்கள்.

"கடவுளைக் கண்டதில்லை என்று பொய்
சொல்லாதீர்கள் எல்லோரும்
கடவுளைப் பாருங்கள்
அப்பா அம்மா உருவில்"

என்ற இவரது கவிதையே அதற்கு
சிறந்ததொரு காட்சியாக நிலைத்து
விடுகிறது.

"தேர்தல் வரட்டும்
சேலையும் கொலுசும்
அரிசியும் பருப்பும்
வீடு தேடி வரும்
அதுவரைக்கும்
கொஞ்சம்
அணைத்தே வை
பற்றியெரியும் அடுப்பையும் வயிறையும்"

என்று சமகால அரசியல் மீது இவருக்கு
இருக்கும் பெருங்கோபம் நம்
எல்லோருக்கும் பற்றிக்கொள்ள
வேண்டும் என்ற நெருப்புப் பொறியாக
விழுந்திருக்கிறது இந்த நூலில்.
வாக்கு சேகரிப்பதற்காக இலவசங்களை
அள்ளி வழங்கி வெற்றி பெற்றவுடன்
செலவழித்த அனைத்தையும்
மக்களிடமிருந்து சுரண்டும்
அரசியல்வாதிகளுக்கும் இலவசங்களைத்
தேடி ஓடும் மக்களுக்கும் இந்தக் கவிதை
நல்லதொரு சவுக்கடி.

இன்றைய நவீன யுகம் பல்வேறு
கருவிகளை மனிதர்களின் உழைப்பிற்காக
கண்டுபிடித்து ஒப்படைத்தாலும்
அவற்றின் நன்மை தீமைகளையும்
மனிதர்கள் ஆராய்ந்து பார்த்தல் மிக
அவசியம். ஒவ்வொரு வீடுகளிலும்
மனிதர்களின் பொன்னான நேரத்தை
திருடிக் கொண்டிருக்கும்
தொலைக்காட்சியின் சிரமங்களை
அழகாகப் பட்டியலிடுகிறது ஒரு கவிதை.
தேவைப்படும் நேரத்தில் கிடைக்காத
உணவும் தேவைப்படும் போது
கிடைக்காத நேசமும் பயனற்றுப் போகும்
என்பதை தொலைக்காட்சித்
தொடர்களின் வழியாக ஒவ்வொரு
வீடுகளுக்குள்ளும் நடந்துவரும்
அவலங்களை இந்த கவிதை
தோலுரித்திருக்கிறது.

"அன்னத்திற்கு கல்யாணம் நடக்குமா
நடக்காதா அதைப்பற்றிய கவலை
அவன் அவளுக்கு
உங்களுக்கு என்ன காப்பி வேண்டி
கிடக்குது
எனக்கல்ல
நண்பர் வந்திருக்கிறார் காத்திருந்தோம்
எப்போதும் போல்
இடைவேளை விளம்பரத்திற்கு நன்றி
தொடர் நாடக விளம்பரத்திற்கு"

இரவு நேரங்களில் ஒவ்வொரு
வீடுகளிலும் விளம்பர
இடைவேளைகளில்தான் நமக்கு உணவு
கிடைக்கும் என்பதையும் ஒவ்வொரு
தொடர்களும் பெண்களின் மனதிற்குள்
மிகப்பெரிய ஆதிக்கத்தை செலுத்தி
வருகின்றன என்பதையும் இந்தக் கவிதை

எடுத்துக்காட்டுகிறது.

"வயிறு நிறைந்த
புறா
வந்து போன அடையாளமாக விட்டுச்
செல்கிறது இறகை உன்னிடம் தர
இறகைத் தவிர
ஒன்றுமில்லை"

இந்தக் கவிதையின் ரசனையை எண்ணிப் பார்க்கையில் கவிஞரின் அவதானிக்கும் பண்பும் இயற்கையை ரசிக்கும் பாங்கும் அழகே வெளிப்படுகின்றன. புறாவிற்கு உதவும் மனதிற்கு புறா செலுத்தும் நன்றியாகவும் இதை எடுத்துக் கொள்ளலாம். இறகைத் தவிர பரிசளிப்பதற்கு புறாவிடம் எதுவும் இல்லை என்பதல்ல அந்த இறகினையே அதனுடைய மிகச்சிறந்த பரிசாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

"ஊதாரியாய்
ஊர் சுற்றித்திரிந்த
என்னையும்
உழைக்க வைத்தது
உன் இறப்பு.
இருக்கும்போது சொன்னாய் உழைக்கச்
சொல்லி. இப்போதுதான் தெரிகிறது
எனக்கு சோறு
எப்படிப் போட்டாய் என்று"

இந்தக் கவிதையே அப்பாவின் வழிகாட்டுதலையும் வாழ்வின் கட்டமைப்பையும் தனது வாரிசுகளுக்காக அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகளையும் நாம் எப்படி புரிந்து கொண்டோம் என்பதையும் படம் பிடிக்கிறது.

"கடன் கொடுத்த
கந்து வட்டிக்காரன்
அவனின் தன்மானத்தை விட்டு
கத்துகிறான்
வீதி முழுக்க வேடிக்கை தன்மானம் ஏலம்
போனது வெளிநாடு போன பையன்
பணம் அனுப்பவில்லை
இரவில் படுத்தவர்
எழவே இல்லை
கந்துவட்டி காசில்
வெளிநாடு போனவன்
இறுதிச்சடங்குக்குக் கூட
வரவே இல்லை
கவரிமான் சாதி அவன்"

வட்டியின் கொடுமை வறுமையின் நாவை மேலும் மேலும் நெருப்புக்குள்ளாக்கி பொசுக்கி விடுகிறது என்பதையும் வெளிநாட்டு பயணங்கள் பெற்றோர்களின் இறுதிக் காலத்தை எப்படி எலலாம் தவிக்க விடுகிறது என்பதையும் இந்தக் கவிதை எடுத்துக் கூறுகிறது..

"அவள் கட்டி முடிந்த
கூந்தலை
கலைத்துச் சென்றது காற்று. காற்றுக்கும்
நாகரீகத்தின் மீது மோகமாம்."

காதல் கவிதையில் தனது அன்பை முழுவதுமாக பரிமாறி இருக்கும் கவிஞருக்கு அவளின் நாகரீகத்தின் மீதும் ஏற்பட்டிருக்கும் மோகத்தை நம்மால் உணர முடிகிறது.

பழங்கால சமையல் முறைகளில் உரல் உலக்கை ஆட்டாங்கல் போன்றவை சிறப்பான இடம் பிடித்தன. அன்றைய பெண்களுக்கு சமையல் வேலையில் அதிகம் கை கொடுத்து உதவியவை இவை. மேலும் இவையே உணவின் ருசியையும் அதிகப்படுத்த உதவி செய்தன எனலாம். ஆனால் இன்று பெண்களும் வேலைக்குச் சென்று குடும்பத்தை பொருளாதாரத்தின் வழியாக உயர்த்திப் பிடிக்க வேண்டி ஓடிக் கொண்டிருப்பதால் சமையல் என்பதில் நேரத்தை குறைத்துக் கொண்டிருக்கிறார்கள். பாட்டிகள் செய்து கொடுத்த பலகாரங்களும் நிலக்கடலை உருண்டைகளும் எப்படி நமக்கு மனதிற்குள் இன்னும் இனித்துக் கொண்டிருக்கிறதோ அதேபோல இன்றைக்கும் கிடைக்குமா என்ற ஏக்கம் நமக்குள் எதிரொலப்பதை தவிர்க்க முடியாது. அதையே அந்த பொருட்களும் ஏங்கி நிற்பதாக சொல்லும் இந்த கவிதை அஃறினைகளும் ஆவல் கொள்ளும் என்பதற்கு சாட்சியாகிறது.

"பேரன் பேத்தி எடுத்த எங்களுக்கு
ஆத்தாத்தாக் கிழவி இடித்து தந்த
நிலக்கடலை உருண்டை
மணம் நினைவில் நிற்க
உரலும் உலக்கையும்
ஏங்கி நிற்பதில்
ஆச்சரியம் இல்லை"

"பல நாள் பழகிய கிளி
பெயர் சொல்லி அழைக்கிறது
அம்மா அப்பா அக்கா
சொல்லிச் சொல்லி அழைக்கிறது.
சின்னப் பையன் திறந்து விட்டான்
பறந்து போன கிளியே
சுதந்திரக் காற்றை சுவாசிக்கிறது
'நன்றி' என்ற சொல்லை
மட்டும் கற்க மறந்தது"

இந்தக் கவிதை கிளிகளுக்காக மட்டுமே எழுதப்பட்டது அல்ல விடுதலையை வேண்டி காத்திருக்கும் ஒவ்வொரு மனிதரும் அதை அடைந்த பின்னர் அதற்கான தியாகத்தை எண்ணிப் பார்க்கிறார்களா என்பதையும் சொல்லிச் செல்கிறததுதானே.

"கண்ணே
உன் விழிகளை
சற்றே இமைத்துக் கொள் சுட்டெரிக்கும்
சூட்டிலிருந்து சற்றே விலகிக்
கொள்கிறேன்"

காத்திருந்து காத்திருந்து கோபப்படும் காதலியை காட்சிப்படுத்துகிறாரா அல்லது சொன்னபடி இல்லாது மறந்து போன அல்லது நினைவில் தவறிப் போன அன்பின் கோபத்தை காட்சிப்படுத்துகிறாரா என்பது வாசிக்கும் மனநிலையைப் பொறுத்து ஒவ்வொருவருக்கும் மாறிக் கொண்டிருக்கும் அற்புதமான காதல் கவிதை இது.

"ஆணவம் உள்ளவன் ஆண்டவனை
இழக்கிறான் பொறாமைக்காரன் உறவை
இழக்கிறான்
கோவக்காரன் அவனையே இழக்கிறான்
உனக்கு எப்பொழுதெல்லாம் கோபம்

வருகிறதோ அப்போதெல்லாம் கேள் புத்தன் ஆகிவிடு."

பேசுவதை விட கவனிப்பதிலும் கேட்பதிலும் அதிக ஆர்வம் கொள்ளுங்கள் என்பதற்காகவே இயற்கை மனிதனுக்கு காதையும் கண்ணையும் இரண்டாகப் படைத்திருக்கிறது என்பார்கள். ஆனால் இந்தியர்களாகிய நாம் பேசுவதிலேயே அதிக கவனத்தைச் செலுத்தி நமது ஆற்றலை இழந்து விடுகிறோம். அதுவே நமக்கான வாய்ப்புகளையும் தொலைத்து விட வழியமைத்து விடுகிறது. நின்று நிதானித்து கேளுங்கள் எல்லோருக்குள்ளும் புத்தன் வாசம் செய்கிறான் என்பது இந்தக் கவிதை நமக்கு கொடுக்கும் அமைதிச் சின்னம்.

"வளர்ந்து கொண்டிருப்பது செடிக்கு மகிழ்ச்சி.
நகர்ந்து கொண்டிருப்பது நதிக்கு மகிழ்ச்சி
எரிந்து கொண்டிருப்பது தீபத்திற்கு மகிழ்ச்சி
முயன்று கொண்டிருப்பது மனிதனுக்கு மகிழ்ச்சி"

என்று தான் எழுதிய கவிதையைப் போலவே கவிதையின் ஒவ்வொரு நுட்பத்திலும் முயன்று கற்றுக் கொள்ளும் இந்த கவிஞருக்கு எளிய மொழியும் அதற்குள் புகுத்திக் கொண்டிருக்கும் வலிமையான கருத்துக்களும் நல்லதொரு நடைச் சித்திரத்தை கடைவிரிக்கின்றன.

இலக்கியத்தின் தீரா பசி என்பது மனிதருக்குள் எப்போதும் அன்பையும் கருணையையும் விதைத்துச் செல்வதே. ஒரு நல்ல இலக்கியம் என்பது வாசிப்பவருக்குள் ஏதேனும் ஒரு சிறு தாக்கத்தையாவது ஏற்படுத்தி விட வேண்டும். நூலை வாசிப்பவர்களுக்கு இயற்கையின் மீதான நேசமும் சக மனிதர்களின் மீதான பாசமும் உறவுகளின் மீதான பந்தமும் தொடர்ந்து வருவதற்கு கவிதை வரிகள் வழிகாட்டக் கூடும். ஒவ்வொரு கவிஞனுக்குள்ளும் இந்த பரந்த உலகத்தின் அவலங்களை துரத்தி அடிக்கும் ஏதேனும் ஒரு கனவு இருந்து கொண்டே இருக்கும். அத்தகைய கனவுகளை எழுத்தாக எழுதி வைப்பவர்களும் உண்டு. செயல்பாடுகளுக்குள் சிறந்து விளங்குபவர்களும் உண்டு.

"நீண்ட நாட்களாக நான் மனிதனைத் தேடுகிறேன் மனிதத்தைத் தேடுகிறேன் மனிதருள் மனிதம் இல்லை எல்லோரும் மனிதனைப் போல் இருப்பதால் இன்னும் தேடுதல் நிறைவடையவில்லை"

என்ற இவரது கவிதையைப் போலவே இலக்கியத்தடத்தில் இவரது தேடல்கள் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கட்டும். அதுவே அவருக்கான வார்த்தைகளையும் எடுத்துக் கொடுத்து நல்ல நல்ல தொகுப்புகளுக்கு களம் அமைக்கும்.

—

இளையவன் சிவா,
கைபேசி: 9965359130



# எல்லோரிடமும் அன்பாக பேசுகிறர்கள்,

உதவியென கேட்டால்
ஓடோடி வருகிறார்கள்...

தனக்கென வைத்திருக்கும்
கொஞ்ச உணவையும்
பசியென வருபவர்களுக்கு
தந்துவிடுகிறார்கள்...

ஒழுகும் குடிசைகளை
கண்டதும்
கண்களில் மழைகளைப்
பொழிகிறார்கள்...

இரவு பகல் பாராமல்
உழைக்கிறார்கள்,

தன் கையை மட்டும் நம்பி
பிழைக்கிறார்கள்...

முகங்களை காட்டியதில்லை,
முகவரியும் நீட்டியதில்லை...

காற்றைப் போல வந்து
காற்றைப் போல மறைந்து போகும்
இவர்கள் மகுடமில்லா
இந்நாட்டு மன்னர்கள்!

— மு. முபாரக்,
திருச்சி.



---

# தலைவனும் தலைவியும்!

## பா வகை: ஓரடிக்கும்மி

தலைவியின் காதல் தலைவனை ஈர்த்தே
தனித்திறன் கொண்டே தழைத்திடுமே!

காதலில் இன்பமோ காதலி வாழ்வினில்
காதலன் கொள்ளும் விருப்பத்திலே!

ஒருவரின் அன்பும் ஒருவரை ஈர்க்குமே
ஒற்றுமை ஓங்கிடும் காதலிலே!

விருப்பமே வாழ்வில் வியப்புடன் நிற்கும்
விளைந்திடும் வாழ்வினில் காதலுமே!

அன்பினால் காதல் அழகென மாறுமே
அன்புடன் காதலர் வாழ்க்கையிலே!

இருவரின் காதல் இணையாய் இருந்தால்
இனிமையே என்றும் நிலைத்திடுமே!

—

(வாழ்வியல் கவி )
சா. நாகூர் பிச்சை
துபாய்.



# ஆசான்

மாணவர்கள்
படிக்கும்
முதல் புத்தகம்
ஆசான்

பரிசாக வந்த
பொக்கிசம்
ஆசான்

என்ன விலை
கொடுத்தாலும்
கிடைக்காத
உன்னத உறவு
ஆசான்

எந்த கவிஞனாலும்
எழுதி முடிக்க
முடியாத
ஆகச்சிறந்த கவிதை
ஆசான்

எத்தனை புத்தகங்கள்
இருந்தாலும்
முடிவுரை இல்லாத
புத்தகம்
ஆசான்

தவறுகளை
மன்னித்து மறக்கும்
ஒரே நீதிமன்றம்
ஆசான்

தவறுகள்
நேர்ந்து விட
கூடாதென
நேர்த்தியாய்
வழிகாட்டுபவர்
ஆசான்

அறிவுடன்
அன்பையும்
குழைத்து
ஊட்டுபவர்
ஆசான்

பாசத்துடன்
பண்பையும்
சேர்த்து தருபவர்
ஆசான்

ஓய்வு என்ற
சொல்லுக்கு
அர்த்தம் தெரியாதவர்
ஆசான்

பாதுகாப்பு என்ற
வார்த்தைக்குக்கூட
காவலாளி
ஆசான்

தன் மாணவர்
வளர்ச்சிக் கண்டு
பொறாமைக்
கொள்ளாதவர்
ஆசான்

ஏறுவதற்கு
மட்டுமே பயன்படும்
ஏணிப்படியாக

இருப்பவர்
ஆசான்

அறப்பணியை
அர்ப்பணிப்போடு
செய்கிறவர்
ஆசான்

தாயிற் சிறந்ததொரு
கோயிலுமில்லை
தந்தை சொல்மிக்க
மந்திரமில்லை

ஆசானிடம் பயிலாத
மனிதனில்லை

ஆசிரியர் தின வாழ்த்துகள்

—

கவிஞர்
மு. ஜெரோஷா,
திருப்பூர் மாவட்டம்.

---

# பூக்காரி

ஒவ்வொரு காம்பிலும்
பூத்த பூக்களைப் பறித்து
ஒற்றைக் காம்பில்
ஏற்றி விடுகிறாள்
பூக்காரி

வாசனையை
ஊரெங்கும் பரப்ப
வாய் திறந்திருக்கின்றன
பூக்கள்

முழம் போட்டு
குட்டியும் போடுகிறது
பூச்சரம் விற்கும்
பூக்காரியின் மனது

கூவி கூவி விற்கும்
அவளின்
பூக்கூடையில்
சேரும் பணத்தின் மீது
உதிர்ந்து விழுகின்றன
சரத்திலிருந்து
சில இதழ்கள்
அவளின் உழைப்பை
முத்தமிட...



காலையில் பூத்து
மாலையில் வாடும்
பூக்களுக்கு மத்தியில்
மாலையிலும் பூக்கிறது
பூக்காரியின் முகம்
சில குழந்தைகளைக்
காணும் போது

நூலால்
காற்றில் கோலமிடும்
அவள் விரலுக்கு

*உண்மையில்
எல்லாப் பூக்களும்
மோதிரமாக அமர்ந்து
எழுகின்றன*

*வாசலில் அமர்ந்தாலும்
பூவைச் சூட மறுக்கப்பட்டாலும்
அவள் கட்டியப் பூவை
சூடிய பின்பே
கடவுளும்
அழகாகத் தெரிகிறார்*

*கடவுள்கள்
கருவறையில் மட்டுமல்ல
வாசலிலும் இருக்கிறார்கள்
பல கண்கள்
பார்த்தாலும்
உணர்வது ஏனோ
சில கண்கள் தான்*

—

*சா. கா. பாரதி ராஜா,*
*38-3, கைலாசநாதர் கோயில் தெரு,*
*பெரிய நத்தம்,*
*செங்கல்பட்டு - 603002.*

---

# இலக்கண கவிதை

உன் இடையை
குறுக்கம் என்றேன்

குறுக்கம் நான்கு வகைப்படும்
அதில் எந்தக் குறுக்கம்?' என்றாய்

ஐகாரக் குறுக்கம்
சொல்லின்
முதல், இடை, கடை என
மூன்றிலும் வரும்
எனவே
ஐகாரக் குறுக்கம் அல்ல
உந்தன் இடை
சொல்லின்
முதலில் மட்டுமே குறுகும்
ஔகாரக் குறுக்கமும் அல்ல
உந்தன் இடை
சொல்லின் கடையில்
குறுகும்
மகரக் குறுக்கமும் அல்ல
உந்தன் இடை
சொல்லின்
இடையில் குறுகும்
ஆய்தக் குறுக்கமே
உந்தன் இடை
மருங்கு இல்லா மங்கையே
கூந்தலை
அளபெடை என்றேன்
'உயிரளபெடையா ஒற்றளபெடையா?'
என்றாய்

மலரொடு
ஒற்றி வைத்த கூந்தல்
ஒற்றளபெடை
மலர் சூடாத கூந்தல்
உயிரளபெடை
இசை என்றால்
புகழ் தான்
உன் அழகென்னும் இசையின்
நிறைவாக இருக்கும் கூந்தல்
இசைநிறை அளபெடை

பெயர்ச்சொல்
வினையெச்சமாக வரும்
சொல்லிசை அளபெடை
ஜடையாக முடிந்த கூந்தலை
விரித்து விடுவது
உன் நடைக்கு
ஜடை பிடிக்கும் ஜதியில்
கூந்தல்
பிருஷ்டத்தின் கன்னங்களை
மாறி மாறி இடிக்கும் போது
இன்னிசை அளபெடை.

–

மு. ஆறுமுக விக்னேஷ்,
சத்திரப்பட்டி.

---

# தொடர்வண்டி வேகத்தை மிஞ்சுகிறது



பசியில் படுத்துறங்கும்
யாரோ ஒருவனின்
பசி பயணம்

## எல்லாம் முடிந்தபிறகும்

வானம்
தனது ஈரத்தினை
துவட்டத் தொடங்கியது
வானவில் துண்டுகளுடன்..

## புத்தனிடம் சொல்வதற்கு முன்

நம்மிடம் நாமே சொல்லி தீர்க்கலாம்
ஆசையே தீமைக்கு வழியெனும்
பொய்யினை...

## காதல்வசம்

ஒரு வழியாக நம்பவைத்துவிட்டேன்
அந்த வானத்தை
என்னுடன் அவள்
வருகையில்
என்வழியெல்லாம்
பௌர்ணமியென...!

## யாருமற்ற இல்லத்திற்கு

பூட்டின் கனம்
அதிகம் தான்

## யாருமற்ற வீதியில்

ஒரு நாய்க்குட்டியுடன்
பயணிக்க
நிழல் இல்லாத தனிமையும்
துளியளவு நன்றியும் போதுமானது

## வறுமையின் வயிற்றில்

வரிகள்
கவிதை புனையத் தொடங்கியது
படித்து முடிப்பதற்குள்
சுருங்கத் தொடங்கியது பசி

## யானை தும்பிக்கை

அசைக்கும்
பொழுதெல்லாம்
நம்பிக்கை பிறக்கிறது
கனு தழுவிய விதைக்கு..!

ஒரே ஒரு முறைதான்
சொல்கிறேன்
அவள் பெயரை
பலமுறை அழைத்து மகிழ்கிறது
தொலைவில் நிமிர்ந்த பாறை

இப்பொழுது தான் மழை
நிற்கத் தொடங்கியது
ஏனென அறியாமல் குரைக்கும்
நாய்க்கு குளிரின் சாயல்

காதல்வசம்
உனை
ஒவ்வொரு முறையும்
தொட்டு தொட்டு
சில்லுணர்வை உணர்த்தும்
என் தொடுதலுக்கு
நீ கொடுத்த பரிசு
என்னவோ...
எழுந்து நின்று
உன் முன்பின்
ஒட்டிய மண்ணை
உதறி
என்னுள் மூழ்க செய்ததே...
நாளை வா...
நாமும் மூழ்கலாம்
இன்றைக்கு மட்டும் நான் அலை...

இறப்பு செய்தியை கடந்து
வந்த பாதையில்
ஏதுமறியாமல் மணக்கின்றன மிதிபட்டு
கசங்கிய பூக்கள்

எவனோ ஒரு
முட்டாள் கூறிய
தீண்ட தகாத பாதங்களையும்
நனைக்கத்தானே செய்கிறது
கார்மேகத்தினை உடைத்த மழை

—

சே. கார்கவி கார்த்திக்,
நாகப்பட்டினம்.

## கையேந்தும் குழந்தைக்கு பணம் போட மனமில்லை

கருவறையில் குவித்து பார்த்தாலும் காண
முடியவில்லை கடவுளின் முகமானது...

சிறுவனின் கண்ணில்
மிதந்து பார்க்கும்
நிலா



வழியெங்கும் கால்தடம்
தேடி அலைகிறது தாயைப் பிரிந்த
குருவியொன்று

- ச. சத்தியபானு

# நேசாந்திரி...

துயரம் நிரம்பிய கோப்பையில்
கண்ணீர் சேர்ப்பதற்கு
வழியின்றி தவிக்கிறேன்
நேசத்தாழி உடைந்து வழிந்தோடி
இல்லாமலான சந்தோசத்தில்,
நாமென்ன இல்லாது போய்
விட்டோமா?

ஆற்றங்கரை ஆல் விழுதில்
எதிரொலிக்கும் கீச்சிடல்கள் என்
இறைஞ்சுதலின் பாடல்களோடு
சேர்ந்த ஓலமாகின்றன
ஞாபகத்தீக்குள்ளான யாகமென
தொடராகும் இப்பயணம்
தரிசனத்திற்கென

இன்னும் அந்தக் காலத்தில்தான்
என்னான்மா
பிறிதொரு கணம்
புன்னகையம்சத்தில் அவிழ்ந்து
மணம் பரப்பிய கனவு தேசத்தில்
நேசாந்திரியானேன்

உன் சிலும்பிய கூந்தல்
இரவை மறைத்துக் கிடக்கும் ஒளியில்
நுதல் பிறையில் விரல் பதித்த
ஆகிருதியில்
பரிதவிப்பின் நேரம்
உறைந்து கிடக்கும்

நேசத்தின் ஆவல் கங்கையாய்
கடலாய் பெருக்கெடுக்க
அதை காண்பிக்கும் வழியில்லாது
அடைபட்ட
பிரவாகம் தலையமிழ்த்த
துயரம் தூக்கிட்டுக் கொண்டது

காலங்கடந்தாயிற்று
வலித்தவையின் தித்திப்பில்
கீறல் ஒய்ந்த வடு மேடாகிறது
மேலாடி மலையாகிறது
இரக்கமும் ஏக்கமும் கொண்டு
அரிந்து துண்டங்களான வானத்தை
பார்ப்பது போலான கூண்டுக்கிளி நான்

செத்துப்போனதற்கு நீர் தெளிக்கும்
பிறழ்வின் பிறவி நூதனங்களோடு
பொய்யின் வழிபாட்டை
பிழையினும் பிழையாக
ஓதிக் கொண்டிருக்கிறேன்
மெய்யிலும் மெய்யாக
நம்பிக் கொள்ள

—

Dr. ஜலீலா முஸம்மில்,
ஏறாவூர்,
இலங்கை.



# சேமமெலாம் சேரட்டும் செம்மொழி செழிப்பிற்கே!

நாவிசைக்கக் கூட்டிடும் நலம்பல உடலுயிர்க்கு!
பாவிசைக்க வளர்த்திடும் பல்லாண்டு ஆயுளுக்கு!
வாழ்வுமொழி நமக்கு வரையறை முறைக்கு!
வாழவழி நிறைக்கு வழுவாத நிகர்க்கு!

ஆண்டாண்டு சென்றாலும் அகவையால் பெருமை!
அடுத்தடுத்த யுகத்திற்கும் அழியாதப் புதுமை!
எழுத்துகளால் இலக்கியமாய் ஏடுகளில் கருவுயிராய்
முழுமையிலே இலக்கணமாய் முடியாது முடிவிலியாய்

பெருந்தவத்தின் ஈடெனவே பெற்றோம் நற்றமிழை!
அருமருந்தாம் தமிழுயரவே ஆற்றுவோம் நற்கடமை!
வெள்ளத்தே தப்பிடும் வெற்றான மிதவையாய்
உள்ளத்தே ஊடுருவாது உருவிடுவோம் அயல்மொழியை!

நலிந்திடாது நிற்பதற்கு நேர்மறைத் தமிழை
ஒலித்தோங்க முற்படுவோம் உயர்மறை மொழியை!
நாமொருங்கே சேர்ந்திடுவோம் நம்மொழி பெருமைக்கே!
சேமமெலாம் சேரட்டும் செம்மொழி செழிப்பிற்கே!

- கவிஞர் மாலதி இராமலிங்கம்,
புதுச்சேரி.

---

# ஏதோ நினைவுகள்

முப்பது ஆண்டுகள் கழித்து, அவளை பார்ப்பேன்'னு கொஞ்சம் கூட நான், நினைத்ததேயில்லை.
எதைச்சையாகத்தான் நான் அவளை பார்த்தேன்.

ஜானகி, அதே ஒல்லியான, உடல்வாகு. ஆனால் உயரம் கொண்டவள். மாநிறம், இப்போது அது இலேசாக மாறியிருந்தது.. அவளோடு ஒரு பெண்.. என்னோடு இவள், படித்த போது எப்படி இருந்தாளோ, அதே உருவத்தில்.. கொஞ்சம் கூட, மாறுபாடு இல்லாமல்.. அச்சு அசலாய் இருந்தாள்.

நேருக்கு நேராய், பார்த்துக் கொண்டதும், உடனே இருவராலும் பேச, முடியவில்லை. எதிரெதிரே, கடக்க முடியாமல், நின்றுக்கொண்டோம். அந்த

பெண்தான் பேசினாள்.

"என்னம்மா நின்னுட்ட..?" சொல்லிவிட்டு, என்னை பார்த்து,

"சார் வழிய விடுங்க.. குறுக்கால அடச்சுக்கிட்டு.." என்றாள். நான் சிரித்து விட்டேன்.

"ஏ.. என்னுடன் படித்தவர்.." என அந்த பெண்ணுக்கு, பதிலை சொல்லிவிட்டு,

"இவ, என் பொண்ணு சந்திரன்.. நீ எப்படி இருக்க?" என்றாள் ஜானகி. நான் சிரித்தபடி...

"நல்லா இருக்கேன் ஜானகி.. நீ எப்படி இருக்கே.. பொண்ணு உன்ன போலவே.. பத்தாம் வகுப்பு படிக்கறப்ப, நீ இதே போல்தான்.. இருப்ப..கொஞ்சம் கூட மாற்றமில்லை.." என்றபடி, அந்த பெண்ணை" பார்த்து,

"உன் பேரு என்னம்மா.." என்றேன். அவள் தயக்கமெல்லாம் படவில்லை.

"ஐஸ்வர்யா.. மாமா" என்றாள்..

"நல்ல பேரும்மா .. என்ன படிக்குற..? கேட்டதும்..

"பத்தாம் வகுப்பு, நிறைநிலைப்பள்ளி.." என்றாள். நான் ஜானகியின், பக்கம் திரும்பி, "எத்தன குழந்தைங்க உனக்கு ஜானகி?" என்றேன். ஜானகி வெட்கமாய், சிரித்தாள்.

"சொன்னா சிரிக்க கூடாது.. எனக்கு, மூனு பொண்ணு.. ஒரு பையன்.. இவ மூணாவது.. பையன் நாலாவது.. எட்டாம் வகுப்பு படிக்கிறான்.." என்றாள்..

எனக்கு உண்மையிலேயே ஆச்சர்யம்.. இரண்டு குழந்தைகளை, பெறுவதையே அதிகம்'னு, நினைக்குற காலத்துல, நாலு குழந்தைகளை பெற்று... வளர்த்து.. ஆச்சர்யமாய் இருந்தது.

"இதில், சிரிக்க என்ன இருக்கு? ஜானகி.. இதெல்லாம் நம்ம கையிலா.. இருக்கு?" ஏதோ, சொல்லனுமே என்ற, எண்ணத்தில் சொன்னேன்.

"சரி போவட்டும் .. உன் கொழந்தைகளை பத்தி, சொல்லேன்.. பொண்ணா ஆணா.. இல்ல பொண்ணும் ஆணுமா..? கேள்விகளை அடுக்கி, போனாள்.

"இல்ல ஜானகி.. எனக்கு இரண்டும் பையன்தான்.. இரண்டு பேரும் கல்லூரி போறாங்க.. ஆமா.. இதே ஊர்லேயா, இருக்க.. உன் கணவர் இதே ஊர்தானா?"

"இல்லப்பா.. அவரு கடலூர்.. அங்கதான்," கல்யாணம் ஆனதும், போனோம்.. அவரு ஒன்றிய அரசு, வேல.. மூனு வருசத்துக்கு பிறகு, டெல்லியில மாற்றலாச்சு.. அதுக்கு பிறகு, வடக்கு, கிழக்குன்னு மாத்திட்டே இருந்தாங்க.. அவரு மட்டும் தான்..

அங்கே காலத்தை கழிச்சாரு.. நான் பசங்களுக்காக, போகல.. இங்கேயே படிச்சதால, இங்கயே இருக்க, வேண்டியதாச்சு.. இரண்டு வருசம் முன்னதான், திரும்ப இங்க மாற்றலாச்சு." அதான் நம்ம ஊர்லேயே, வந்துட்டோம்.. இனி அவருக்கு ஓய்வு பெறும்வரை இங்கதான் இருக்கனும். சரி.. நீ எங்க இருக்க.. என்ன பண்ற சொல்லேன்" என்றாள் ஜானகி.

அந்த ஐஸ்வர்யா, நாங்கள் பேசுவதையே பார்த்துக் கொண்டிருந்தாள். சாலையின் ஓரமாக, நின்று பேசுவதை, நான் அசௌகர்யமாய், உணர்ந்தேன்.. பக்கத்தில் உள்ள உணவகத்தில் வலிந்து அழைத்து போய், உட்கார வைத்து, என்ன வேண்டும் என கேட்டு, மூன்று காபி வாங்கி கொடுத்தேன்.

"கேட்டேனே.. சொல்லு சந்திரன்.." நான் சுருக்கமாய் சொன்னேன்..

"இங்கயே அச்சகம் வச்சிருக்கேன்.. 'ஸ்ரீ ஆஞ்சநேயா அச்சகம்' கேள்விபட்டிருக்கியா.." கேட்டதும், ஜானகியின் மகள் ஐஸ்வர்யா, சொன்னாள்.

"ஓஓ தெரியுமே.. எனக்கு.. எங்க அக்காங்க இரண்டு பேருக்கும் கூட, சடங்கு விழா நடத்த, அந்த அச்சகத்தில தானே அழைப்பிதழ் போட்டோம். கார்டு பின்னால அச்சகம் பேரு இருந்துச்சே.." நான் அவள் பேசியதை கேட்டேன்..

"அப்படியா இருக்கலாம்மா.." என்றேன்..

"அச்சகம் தானா.. பரவாயில்லையே.. நல்ல தொழில்தான்.. ஆனா நீ பத்தாவதுல ஆசிரியை கேட்டப்ப, காவலராக வேண்டும், கண்காணிப்பாளராக வேண்டும் என்று சொன்னியே.. அதெல்லாம் என்னாச்சு சந்திரன்..?" என்றாள் ஜானகி.

"ம்ம் அதற்கெல்லாம் முயற்சி பண்ணி, முடியாம போச்சு.. ஜானகி..எங்க ஆண்டுல, அதை நடத்த கூடாது'னு, தடை வாங்கிட்டாங்க.. அதோட அந்த கனவு முடிந்தது.. சரி.. நாலு பேருக்கு, வேலையாவது கொடுப்போம்'னு, அச்சுத் தொழிலை தொடங்கியாச்சு.." என்றேன்.

"ம்ம் பரவாயில்லை.. நினைச்சதெல்லாம் நடந்துட்டா.. அப்புறம் என்னாவது..? விதி'ன்னு, ஒன்னு இருக்கே.. நம்ம நெத்தியில, எழுதினது தானே, நடக்கும்.. இந்த தொழில் நல்லாதானே.. போகுது..?" கேட்டாள்.

"ம்ம் பரவாயில்லை.. நல்லாவே இருக்கு.. " என்றேன். ரசீது வந்தது. பணம் கொடுத்து அனுப்பினேன்.

"நான் கொடுக்கிறேன் மாமா" என்றாள் ஐஸ்வர்யா..

"வேண்டாம்மா.. நானே தரேன்" என்று சொல்லிவிட்டு, வெளியே வந்தோம்.. அவளது இலக்கத்தை வாங்கி சேமித்துக்

கொண்டேன். என் இலக்கத்தை அவளது எண்ணிற்கு அழைப்பு விடுத்து துண்டித்தேன்.

"சீக்கிரம் மொத பொண்ணு.. கல்யாணத்துக்கு அழைப்பிதழ் அச்சடிக்க அவரோடு வரேன்" என்று சொன்னாள்.

"வரும் போது 'அழைப்பு' விடுத்துவிட்டு வா ஜானகி" என்ற போது, 'சரி' என்பதை போல என்னை பார்த்தபடியே தலையாட்டினாள்.

நேரம் கடக்கவே, அவர்களுக்கு விடைக் கொடுத்தேன். சற்று, தொலைவு போய் அவள் என்னை திரும்பி பார்த்ததை கண்டேன். அவள் எப்போதுமே அப்படித்தான் பார்ப்பாள்.

பத்தாவது படிக்கும் காலத்தில்தான், அவள் என்னை அதிகம் பார்த்தாள். எப்போதும் திரும்பி பார்ப்பதை வழக்கமாய் கொண்டிருந்தாள்.

அந்த நேரமெல்லாம் படபடப்பாய் வரும்.. மனதில் 'திக்திக்' எனும் ஓசை, சத்தமாய் கேட்கும். இதயம் துடிக்கும் சத்தம், நன்கு உணர்வேன்.. ஆனால் பேசியதில்லை. கடைசி கடைசி நாளில், எல்லோரும் விடை பெறும் போது, அவள் என்னை பார்த்த பார்வையும், நான் அவளை பார்த்ததும் சோகமான விநாடிகள் அது.

அப்போதும், நான் பேசியதுமில்லை.. அவள் என் காது மட்டும் கேட்குமாறு ஒரு வார்த்தை சொல்லிவிட்டு போனாள்.

"சந்திரன் என்னை ஞாபகத்துல, வச்சிப்பியா.. என்று?" அந்த வார்த்தையின் ஒலி, இப்போதும் எனக்கு கேட்டது. நினைவுகள் திரும்ப அவளை பார்த்தபோது அவள் சாலைகளின் கூட்டத்தில்" மறைந்து போயிருந்தாள்..

"என்னப்பா இங்க நிக்கறீங்க.. உங்க வண்டி எங்க.? யாரோடோ.. பேசிட்டிருந்தீங்களே.." யாரு அந்த அத்தை?" என்ற என் மகனின் குரல் கேட்டு, திரும்பினேன். என்னருகே நின்றுக் கொண்டிருந்தான்."

"நீ எப்போ வந்தே..?" எங்க வந்தே..? வண்டி அச்சகத்துல தான்டா.. இருக்கு ஒரு காபி குடிக்க, வந்தேன்..? வா போவோம்.." என்றபடி அச்சகத்தை நோக்கி, நடந்தேன்.

"சரிப்பா.. யாரு அந்த அத்தை? உங்களுக்கு தெரிஞ்சவங்களா.. இல்ல உங்க 'வகுப்பு தோழியா?"

ஒரு வேளை, அம்மா சொல்லுமே.. நீங்க யாரோ, உங்க வகுப்பு பொண்ண 'காதல்' பண்ணிங்களாமே..? ஆனா எதுவுமே சொல்லலையாமே..?

அம்மா எல்லாத்தையும், எங்க கிட்ட சொல்லி இருக்காங்க.. ஆனா அப்பா.. சொல்லவேயில்லைனா அதெப்படிப்பா காதலாகும்?" என மகன் கேட்டுவிட்டு என் முகத்தை பார்த்தான். நான் வாடிப்போனதை பார்த்ததும், "மன்னிச்சிடுங்கப்பா" என்றான்..

"உள்ளுக்குள்ள பரவாயில்லைடா.. ஜானகிராமா.. விடு.. அம்மாட்டா சொல்லாத.. கிண்டலடிக்கும்.."

"சரிப்பா..சொல்ல மாட்டேன்" மகன், உண்மையிலேயே வருந்தியது.. அவனது குரலில் தெரிந்தது. அச்சகத்துக்கு வந்ததும் முதல் வேலையாய் ஜானகியின் கைப்பேசி இலக்கத்தை அழித்து விட்டு உட்கார்ந்து கண்ணை" மூடினேன்.

ஐஸ்வர்யா கேட்டாள்.. "அம்மா.. அந்த மாமா உன்னை காதலித்தாரா?" நடந்து கொண்டிருந்த எனக்கு திக்கென்றது.

"என்னடி இப்படி கேக்கற.. அப்படியெல்லாம் இல்லைடி.. நல்ல நண்பர்கள்.. நல்லா படிப்பான்.. அவ்ளோதான்.."

"பொய் சொல்லாத... அம்மா" உன் கண்ணைப் பார்த்தேன்... அங்குமிங்கும் ஒரு இடத்துல நிக்கல.. பாவம் அவர பார்த்தாலும் பரிதாபமா இருந்துச்சு.. ஏம்மா பொய் சொல்லுற..?"

"ஏய்.. இப்படி எல்லாம் பேச.. யாரு கத்துக் கொடுத்தது உனக்கு?

"பொய் கோபத்தை, காட்டினேன்..

"சரி விடும்மா.. தோணுச்சு கேட்டேன்.. இதுக்கு ஏன் கோவப்படற.. கடைசியா ஒரு கேள்வி.. கேக்கவா.." நான் முறைத்தவுடன்...

"வேணாமா... சரி விடு" என்றாள்.. நான் நினைத்துக் கொண்டேன்.. 'என்ன கேள்வியா இருக்கும்..? கேட்டுடலாமா.. ?" கேட்டு விட்டேன். ஆனால் கோபமாய்த்தான் கேட்டேன்.

"கேட்டுத்தொலைடி.."

"ம்ம் வேணாம்மா.. அவரு காதல் பண்ணாரான்'னு கேட்டதுக்கே," பதட்டமாகுற.. அப்புறம்.."

"ஐஸ்வர்யா கோபபடல.. கேட்டு தொல.." என்றேன். அவள் கேட்க வருவதை, என்னால் புரிந்துகொள்ள, முடிந்தது. ஆயினும், அவள் குரலில் கேட்க, ஆவலாய்தான் இருந்தேன்.

"அம்மா அப்புறம் கோவப்பட கூடாது.. சத்தியமாக.." என கையை நீட்டி கேட்டாள். அவள் கைகளை பிடித்தபடி...

"சரிடி சனியனே சொல்லித் தொலையேன்.." என்றேன்.

"அவரு 'காதல்' பண்ணலைனா.. நீ, அந்த மாமாவை, 'காதால்' பண்ணியா.. சொல்லு.. பொய் சொல்லாம.. சொல்லு.." என்றாள். எனக்குள் ஒரு ஆர்வமும் சோகமும் கலந்த உணர்வு.. முகத்தில் பிரதிபலித்ததை உணர்ந்தேன்.

"போடீ கழுதை.. அம்மாகிட்ட பேசற பேச்சா.. இது..?" சமாளித்து, வீடு வந்து

சேர்ந்தேன். சமயலறையில் வாங்கி வந்த பொருட்களை வைத்துவிட்டு இருக்கையில் உட்கார்ந்த போது உள்ளே நுழைந்த மகன் சந்திரசேகரன் கேட்டான்.

"அம்மா இவ்ளோ நேரம் ஏன்..? வெளியே போய் வர..?" பசிக்குது.. எனக்கு ஏதாவது, சாப்பாடு செஞ்சு கொடேன்..?" அவன் பேச்சைக் கேட்டதும்.. ஐஸ்வர்யா அவனருகே வந்து•••

"டேய் சந்துரு.. அம்மாவை, தொல்லை பண்ணாதே.. நான் செஞ்சு கொடுக்கறேன்.. நீ போ பத்து நிமிசத்துல கூப்பிடறேன்" என்று சொல்லிவிட்டு வந்தவள்.. என்னிடம், "அம்மா, நான் கேட்டதுக்கு பதிலே சொல்லலை.. ஆனா பதில் எனக்கு தெரியும்.. நீ ஒய்வெடு எடு.. நான் தம்பிக்கு, சாப்பாடு பண்றேன்" என்று என்னை பார்த்து சொல்லிவிட்டு உள்ளே போனாள் ஐஸ்வர்யா.

நான் கைப்பேசியை எடுத்து சேமித்து வைத்து இருந்த சந்திரனின் இலக்கத்தை, 'அழித்துவிட்டு' கண்ணை மூடி இருக்கையில் சாய்ந்து உட்கார்ந்தேன்.

— இரவிச்சந்திரன்,
சென்னை.



---

## நீ வைக்கிற

சாம்பாரே ருசிக்கிறது
கொஞ்சம் கொண்டு வந்து
கொடேன் என்றார் தாத்தா

அவர் சாம்பலாகிப்
போன பின்பு தான்
அது நினைவுக்கே வருகிறது•••

கொதிக்கிற சாம்பாரில்
வேகாமலே கிடக்கிறது
என் குற்றவுணர்வு..

## உள்நோயாளிகள் பிரிவில்

ஒவ்வொரு நாளும்
ஒவ்வொரு புதுநோயாளிகள்
ஒவ்வொரு படுக்கையில்
மாறிக்கொண்டிருக்கிறார்கள்

அத்தனை நாளாயிருந்த
மெத்தை விரிப்புகளை
மாற்றவே இல்லாமல்

மறந்தும் கூட மறக்காமல்
வாயுறை, கையுறை சகிதமாய்
காலையில் வந்து
நுனி விரல்களால்
சுருக்கங்களை மட்டும் நீவி
சரி செய்துவிட்டுப் போகிறார்கள்
செவிலியர்கள்

பின்...
அவர்கள் கையுறைகளை
கழட்டி வீசிய
குப்பைக் கூடையைப்
பார்க்கிறேன்

தோன்றி மறைகின்றன
ஒவ்வொரு நோயாளிகளின்
முகங்கள்

இறந்து போன
உறவு தான்
இனி நம் தெய்வம்
எனச் சொல்லும்
அவர்களே தான்

இறந்தவன் என்ன
இனி பார்த்துக்கொண்டா
இருக்கப் போகிறான்
என்றும் கேட்கிறார்கள்!

சொர்க்கத்திற்கு சென்றதும்
அப்பாவிற்கு சர்க்கரை வியாதி
குணமாகியிருந்தது போல
இலை நிறைய
அப்பாவிற்கு பிடித்த
இனிப்புகள்...

இப்போது அம்மா
மாறிவிட்டார்
சர்க்கரை வியாதிக்காரராக...

—

பி. ஹேமா,
முசிறி.

# நிலைப்பவனுக்கு...

சாதி இல்லா சமத்துவ உலகை சாதி.
நிதிகளில் நில்லாமல்   மாலையிடும் நீதி.
விதிகளில் விளையாடாமல் வெற்றியே
உன்மதி.
உயர் எண்ணங்களை உள்ளத்தில் துதி.
உழைக்கும் பொழுதுகளை
உனக்குள் மதி.
முயற்சிப் படிகளை ஒவ்வொன்றாய் மிதி.
முன்னேற்றப் பாதையில் முக்கியத் தடம்
பதி.
முடிவுகளை உலகம் பேசும் மீதி.
நம்பிக்கை நாணயம் உன்
இரு கை.
நாளைய வாழ்வே இருக்கை. மனத்துள்
நிர்ணயத்து வை பணி.
மனசுக்கு தினமும் அதுவே அணி.
உதடுகளில் புன்னகை அணி.
தடைகளை தினமும் உடை. தன்மானமே
உனக்கான உடை. பிணங்களாய் மாற்றும்
சோம்பல்.
பிடித்து வைத்து மாற்று மாண்பால்.
திறக்கட்டும் தினமும் எண்ண நடை.
திரும்பும் திசைகளில் ஏது தடை. வாழ்வே
திறம்பட நம்பிக்கை வை
வாழ்வில் சிறப்புற நம்பி கைவை.

இலக்கெது  என நீயே தீர்மானி.
இல்லையேல் உனக்குள் நீ தீராப் பிணி.
எண்ணச்சிறகு கட்டி மனங்களைத் தட்டு.
ஏற்ற நடையில் எவரெஸ்ட்டை எட்டு.
வண்ண மலர்களாய் வாழ்த்துகள்
கிட்டும்.
எழுந்து ஏற்று நிலையை மனதுல் எழுது.
விழுந்து கிடந்தால் விதையே பழுது.
விளைந்த பின் விருட்சமே விழுது.
உன்னால் முடியும் என்ற மனதோடு பற.
உனக்குப் பின் ஓடிவரும் பிற.

## நான் பார்த்த நான்

நான் பார்த்துப் பார்த்து
பழகிய
எனக்குள்
நான் தேடும் நான் இல்லை.
எனைப் பார்த்துப் பார்த்து
பழகிய
நான் எனக்குள் தேடுவதில்லை
என்னை இழந்துவிட்ட என்னை.
நானாக
இருப்பு வைத்தவை
எனக்குள் நிலைக்காதபோது
என்னை நிலைக்கவைக்கும்
எவற்றை இருப்பு வைப்பது எனக்குள்.
நான் சொல்லும் நான்
என்னையே வினாக்குள்
விழ வைக்கையில்
எனக்குள் எழும் வினாவுக்கு
விடையே தேடுவதில்லை
நான் தொலைத்த நான்.
நானே எனக்கான எதிரியாக
மாறுகையில்
நானே எனக்கான
சொற்களைக் கலைத்துவிடுகையில்
நானே எனக்கான நகர்தலில்
அகழிகளைத் தோண்டுகையில்
யாருக்கான சூரியனை
விதைக்கப்போகிறது
என்னை அலறவிடும் நான்.

## நடப்பவை எல்லாம் நன்மைக்கே

நாளும் பொழுதும்
கோளும் பகலவனுமாய்
நகரும் பொழுதில்
நினைப்பதை யாவும் நடந்திடவே
நிச்சயம் மனதில்
வேண்டுமோர் செயல்திட்டம்.
அன்பைப் பண்பை
அறிந்த பின்னே
ஆதரவோடு பரிவு கொண்டே
புன்னகை மொழியால் பேசுகையில்
பூமிப்பந்தில் இன்பமயம்.
முயற்சியின் கரத்தில்
நம்பிக்கை முளைத்திடும்
நல்ல வேளையிலே
எல்லா செயலும் ஈடேறும்
என்றே உறுதி கொள்வோமே.
கடமையின் பின்னே கவனத்தில்
முடித்திருக்க பணியில்
நீ நின்றால்
நடப்பவை யாவும் நன்மைக்கே.

—

இளையவன் சிவா,
கைபேசி: 9965359130



# அவரும் தான்...

எட்டு மணி நேர
எட்டு மணிக்கு துவங்கும்
செய்பணிக்கு
ஐந்து மணிக்கு
ஒலி அழைப்பானை
துணை கொண்டு
எழுந்து மேலொட்டமாய்
செய்திதாள் பார்த்து
நேரம் பார்த்துக்கொண்டே
சடங்காய் உண்டு
கூடுதலாய் நான்கு மணி
உழைத்து இரவில்
கண்கள் தொலைக்காட்சியிலும்
சிந்தனை
நேற்று இன்று
நாளையாயும்
இயந்திரமாய்
மாறுவது
உடம்பும் புத்தியும்
மட்டுமல்ல...

இன்று
நீயா நானா வா
தமிழாவா தமிழாவா
அழுக்கிலிருந்து
ஆடைகளுக்கு
விடுதலையா
வெறிச்சோடிய சாலை
நோக்கி பார்வையா
நிமிடக்கணக்கிலான
பிரார்த்தனைக்கு பதிலாய்
மணிக்கணக்கிலா

என மனதும்
இயந்திரமாய்
தான் விடுமுறை எடுத்து
வார விடுமுறை
என நினைத்து...

## நான் எல்லாம் அப்ப...

தன்னை முன்னிறுத்துவதற்கும்
பாராட்டு கேட்கவும்
ஆசைப்பட்டு
நான் எல்லாம் அப்ப
என்று பழைய கதை
ஆரம்பித்தால்

சிலருக்கு
கேட்டு கேட்டு
சலித்திருக்கலாம்

சிலருக்கு
உண்மையா
என எண்ண
தோன்றலாம்

சிலருக்கு
அதைப்பற்றி
கேட்க விருப்பம்
இல்லாமால்
இருக்கலாம்

சிலருக்கு
கேட்க
பொறுமை இல்லாமால்
இருக்கலாம்

சிலருக்கு
செவி கொடுக்க
நேரம் இல்லாமால்

இருக்கலாம்

எதுவும் சொல்ல
வேண்டாமே

நம்முடைய
தற்போதைய
திட்டமிடலும்
செயல்பாடுகளும்
விளைவான
முடிவுகளும்
பேசட்டுமே...

## ஆமாவா? இல்லையா?

வாழ்க்கை பயணத்தில்
பல வெற்றிகள்
கிடைத்தாலும்
கிடைத்த முதல் வெற்றி

தோல்விக்குப்பின்னே
முயற்சியால் மீண்டாலும்
இழந்தது பற்றிய வருத்தம்

செயல் மேன்மையால்
வசை மொழியை
பின்னர் பாராட்டாய்
மாற்றினாலும்
பெற்ற அவமானம்

நிகழ்கால
உண்மைகளில்
நிறைய மகிழ்ச்சிகள்
இருந்தாலும்
பழையவைகளின்
குதூகலம்

மனதின் ஓரத்திலாவது
எப்பொழுதும்
இருக்கும்

ஆமாவா
இல்லையா

## அதில் இல்லை இதில்

யோசிப்பு என்பது
நேரத்தில் இல்லை
அதன் ஆழத்தில்
வாய்ப்புகளின் அலசலில்

சந்தோஷமமும் உற்சாகமமும்
கால அளவுகளில் இல்லை
காரணத்தில்

வருத்தமமும்
சோகமமும்
எவ்வளவு நேரம் என்பதில் இல்லை
எதுக்காக என்பதில்

பேச்சு என்பது
மணிக்கணக்கில் இல்லை
பேசு பொருளிலும்
சொல்லும் விதத்திலும்

செயல்பாடு என்பது
நேர அளவுகளில் இல்லை
இலக்கை நோக்கியா என்பதில்

கருணையும்
உதவுதலும்
பேசுவதில் இல்லை

எவ்வளவு செய்திருக்கோம்
என்பதில்

## கேட்டால் தானே?...

யாருமற்ற பொழுதுகளில்
உடம்பையும்
புத்தியையும்
அமைதியாய் இரு
என்று சொல்லும் போது

உடம்பு மட்டும்
'சமர்த்து பிள்ளையாய்'
அமைதி காக்க
புத்தி மட்டும்

தொடர்பில் இருக்கும்
மனிதரைப்பற்றி
இவர் சரி
அவர் தவறு

கடந்த கால / நிகழ் கால
நிகழ்வுகளை பற்றி
மகிழ்ச்சியடைவதும்
வருத்தப்படுவதும்

எதிர் காலத்தைப்பற்றி
எதிர்பார்ப்பு கொள்ளுவதும்
பயம் கொள்ளுவதும்

என ஏதாவது ஒரு சிந்தனையுடன்...

- *A.S. சுந்தரராஜன்,*
மானாமதுரை.



---

## சாரல் வீசும் தென்றல்

இனிய தென்றலே
என்னை வருடி செல்ல வா..

இமைக்கும் நொடியிலே
எந்தன் அருகில் நிற்க வா..

நானும் போகிறேன்
நீல ஆழி நோக்கியே..

நீந்தி வருகிறேன்
நீ அழைக்கும் பொழுதிலே..

இனிய சாரலே
என்னை தீண்டி செல்ல வா..

நனைக்கும் பொழுதிலே
உந்தன் அருகில் நிற்கவா..

நீயும் வருகிறாய்
நீல வானம் தாக்கியே..

முந்தி வருகிறேன்
பொன் அந்தி பொழுதிலே..

இனிய ராகமே
என்னை திருடி செல்ல வா..

உன்னை இசைக்கும் பொழுதிலே
என்னை இசையில் மயக்க வா..

நாமும் போகிறோம்
கால நேரம் தாண்டியே..

மிதந்து வருகிறேன்
இரவின் நிலவின் ஒளியிலே..

- மன்னை ராம்குமார் பாஸ்கரன்,
சென்னை.
+91 900 339 9195





ஓவியம்:
**மா. நிரல்யா,**
இரண்டாம் வகுப்பு,
சிங்கப்பூர்.

# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.